மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 107/2013

பெயர் : ரவிக்குமார்
சாட்சி – பி.வா.சா–1 நாள்: 24.04.2025

---

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)**

1. நான் எந்த முகவரியில் வசிக்கிறேன் என்றால் கதவு எண் 22, கலைஞர் வீதி, வேலாயுதம்பாளையம் என்ற முகவரியில் வசிக்கிறேன். மேற்கண்ட முகவரியில் நான் பிறந்தது முதல் வசித்து வருகிறேன். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்ய காலதாமதத்தை மன்னிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவுடன் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் வேங்கடியான் தோட்டம், வேலாயுதம்பாளையம் கிராமத்தில் வசித்து வருவதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட இரண்டு முகவரிகளும் வேறு வேறு என்றால் சரிதான்.

2. எனது நிரூபன வாக்குமூலத்தையும், காலதாமதத்தை மன்னிக்க கோரிய மனுவையும் ஒரே நாளில் கடந்த 07.02.2025 அன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் வேங்கடியான் தோட்டம், வேலாயுதம்பாளையத்தில் தான் வசிக்கிறேன் என்றும், கலைஞர் வீதியில் வசிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது சித்தப்பா கிட்டுசாமி என்கிற கிருஷ்ணசாமியும் வேங்கடியான் தோட்டத்தில் தான் வசிக்கிறார் என்றால் சரிதான்.

3. எனது சித்தப்பா கிருஷ்ணசாமி நல்ல ஆரோக்கியமாக உள்ளார் என்றால் சரியல்ல அவர் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார். எனது எதிர் வழக்குரை எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2013 ஆம் ஆண்டு எனது அப்பா தாக்கல் செய்தார். 2013 ஆம் ஆண்டில் நானோ, எனது அம்மா அருக்காணி அம்மாளோ, எதிர் வழக்குரை தாக்கல் செய்ய விவரங்களை கூற வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றோமா என்றால் இல்லை எனது அப்பா மட்டும்தான் சென்றார். எனது அப்பாவுடன் எனது சித்தப்பா சென்றாரா என்றால் சென்றார்.

4. எனது அப்பாவும் சித்தப்பாவும் என்ன எதிர்வாதம் போட்டுள்ளார்கள் என்று எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் அவர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து ஒரு வருடம் கழித்து எனது அப்பா சொன்னார். எனது அப்பா வாய்மொழியாக சொன்னாரா அல்லது எதிர் வழக்குரை நகல்களை கொடுத்தாரா என்றால் ஆவணங்களை கொடுத்தார். எனது சித்தப்பா கிட்டுச்சாமி நல்ல நிலைமையில் தான் இருக்கிறார் என்றும் அவரை எங்கள் தரப்பு சாட்சியாக விசாரித்தால் உண்மையை கூறி விடுவார் என்பதால் அவரை விசாரிக்காமல் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியில்ல.

5. எனது நிரூபன வாக்குமூலத்தில் எனது சித்தப்பாவால் நீதிமன்றத்திற்கு வர முடியாது என்று சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பா தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று எதன் அடிப்படையில் சொல்லி உள்ளார் என்றால் சொத்தினை எனது அப்பாவின் அப்பா வாங்கியதால் அவ்வாறு சொல்லியுள்ளார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் அவ்வாறு உரிமை கோருகிறோமா என்றால் ஆம்.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கு மேல் புறமாக 78 3/4 சென்ட் விஸ்தீரணம் உள்ள பூமியை 1960 ஆம் ஆண்டு அதே காலையில் எனது தாத்தா மாரப்ப கவுண்டர், மற்றொரு பெரிய மாரப்ப கவுண்டரின் தம்பி சின்ன மாரப்ப கவுண்டரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 1979 ஆம் ஆண்டு தான் பிறந்தேன். 1977 ஆம் ஆண்டு பதிவு செய்யப்படாத கிரைய ஆவணமாக தாக்கல் செய்துள்ள ஆவணத்தினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் எனது அப்பா சொல்லி தான் தெரியும். எனது அப்பா எப்போது சொன்னார் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் சொன்னார்.

7. எனது பாட்டியின் பெயர் மாராத்தாள் ஆகும். எனது பாட்டியுடன் உடன்பிறந்தவர்கள் யார் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எங்கள் வீட்டில் பெரிய மரப்ப கவுண்டர் மட்டும் உடன் இருந்தார். எனது பாட்டியுடன் உடன்பிறந்த சகோதரர்கள் யார் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் பெரிய மாரப்ப கவுண்டரை மட்டும்தான் தெரியும் மற்றவர்களை பற்றி எனக்கு தெரியாது. பெரிய மாரப்ப கவுண்டருக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1955, 1956 காலகட்டத்தில் பெரிய மாரப்ப கவுண்டர் கிரயம் பெற்ற வகையில் அவருக்கு பாத்தியம்.

8. எனது பாட்டியுடன் உடன்பிறந்தவர்கள் யார் யார் என்று எனக்கு நன்கு தெரியும் என்றும் அது தெரிந்து கொண்டே நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பெரிய மாரப்ப கவுண்டர் 1955 காலகட்டத்தில் கிரயம் பெற்றதாக சொல்லும் பத்திரத்தின் சான்றிட்ட நகலை வாதிகள் வா.சா.ஆ.1 ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் அல்ல என்றும், அது பாகப்பிரிவினை பத்திரம் என்றும், அந்த பாகப்பிரிவினை ஆவணத்திலேயே பெரிய மாரப்ப கவுண்டருடன் உடன் பிறந்தவர்கள் நான்கு பேர் ஆண் மக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. எனது நிரூபன வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை நான்தான் சொன்னேன். எனது நிரூபன வாக்குமூலத்தில் மூன்றாவது பத்தியில் ஆதியில் தாவா சொத்துக்கள் பெரிய மாரப்பகவுண்டர் என்பவருக்கு கடந்த 02.12.1956 ந் தேதியில் ஆவண எண்.91/1956 பாகபிரிவினை பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது என்பது சரி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஆவணத்தை பார்க்காமல் எதன் அடிப்படையில் ஆவணத்தின் தேதி, எண் ஆகியவற்றை சொல்கிறேன் என்றால் எனது அப்பா சொன்னதன் அடிப்படையில் சொல்கிறேன்.

10. எனது அப்பா மேற்படி சங்கதியை எப்போது என்னிடம் சொன்னார் என்றால் வழக்கு தாக்கல் செய்து ஒரு ஆண்டு கழித்து 2014 ம் ஆண்டு வாக்கில் சொன்னார். எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர் கருப்பக்கவுண்டர் மகன் மாரப்பகவுண்டர் என்றால் சரிதான். எனது குடும்பத்திற்கு நேரடி தொர்பு இல்லாத பெரிய மாரப்பகவுண்டரின் குடும்ப சொத்தை பற்றி எனது அப்பா சொன்னதன் அடிப்படையில் தெரிந்து கொண்டதாக சொல்லும் நான் எனது அப்பாவின் அப்பாவான கருப்பக்கவுண்டரின் மகன் மாரப்பகவுண்டர் 2026/1960 என்ற எண்ணுள்ள 07.10.1960 தேதியில் கிரையம் பெற்றதை பற்றி தெரியாது என்று சொல்வது நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்ல. 07.10.1960 தேதியிட்ட கிரைய பத்திரத்தை பற்றி எனக்கு தெரிந்தே வேண்டும் என்று வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. 1960 ஆம் ஆண்டு எனது குடும்பத்தினர் சொத்தினை வாங்கும் போதே அதன் சந்தை மதிப்பு ரூ.400/- என்று மதிப்பிட்டு வாங்கியுள்ளார்கள் என்றும், ஆனால், 1977 ஆம் ஆண்டு மேற்படி சொத்தின் பக்கத்து நிலத்தினை அதே விஸ்தீரணத்திற்கு

வாங்கியதாக சொல்லும் நாங்கள் போலியாக தயார்ல செய்ததால் தான் மதிப்பினை குறைத்து ரூ.90/– என்று குறிப்பிட்டு ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 26.12.1955 தேதியிட்ட பாகசாசனத்தின் அசல் எங்களிடம் தான் உள்ளதா எங்களிடம் தான் உள்ளது. மேற்படி ஆவணத்தின் அசலினை எங்கள் வழக்கறிஞரிடம் கொடுத்தோம். 26.12.1955 தேதியிட்ட பாகசாசனத்தின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில் இல்லை. 2014 ஆம் ஆண்டு எனது அப்பா வாய்மொழியாக நினைவில் இருப்பதாக சொல்லும் நான் ஒரு மாத்திற்கு முன்பாக ஆவணங்களை குறியீடு செய்த நான் ஆவணத்தினை தாக்கல் செய்தேனா என்று நினைவில் இல்லை என்று சொல்வது ஏற்புடையது அல்ல என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

13. எனது தாத்தா கருப்பகவுண்டர் மகன் மாரப்ப கவுண்டரின் சொத்துக்களை எனது அப்பாவும் சித்தப்பாவும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் வெங்கடியான் தோட்டத்தில் உள்ள சொத்தினை செய்து கொண்டுள்ளார்கள். தாவா சொத்து சம்பந்தமாக செய்து கொள்ளவில்லை. வெங்கடியான் தோட்டத்தில் உள்ள சொத்துக்களை எந்த வருடம் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. அந்த சொத்து எந்த புல எண்ணில் உள்ளது என்று எனக்கு நினைவில் இல்லை. தாவா சொத்து க.ச.89/2 என்ற காலையில் உள்ளது.

14. எனக்கு சொந்தமான தறிகுடோன் வெங்கடியான் தோட்டத்தில் உள்ளது. மேற்படி சொத்தின் மீது வங்கியில் கடன் ஏதும் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. வெங்கடியான் தோட்டத்தில் உள்ள சொத்தினை எப்போது பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றும் அதன் புல எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்று எனக்கு நன்கு தெரியும் என்றும், அதனை சொன்னால் அந்த ஆவணத்தை எடுத்து விடுவார்கள் என்பதால் நான் சொல்ல மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.04.24 18:12:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.